[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2002 மே 8

அறிக்கைகளைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன். நண்பர் ஞானசேகரன் அவர்கள் சொன்னதைப்போல, இந்த ஆண்டு பொதுக் கணக்குக் குழு, century அடித்திருக்கிறது.

*முற்பகல் 11-55*

**(ஆ) பொது நிறுவனங்கள் குழு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி.*

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி மூன்று முதல் ஐம்பது வரையிலான எட்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

**(இ) மனுக்கள் குழு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.*

**திரு. பி.எம். நரசிம்மன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2002 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் ஏழு மற்றும் எட்டாவது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

**(அ) குற்ற வழக்கு விசாரணைமுறைத் தொகுப்பு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணைமுறைத் தொகுப்பு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணைமுறைத் தொகுப்புச் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு)*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை அறிமுக நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது. குற்றம் சாட்டப்பட்டவர்களெல்லாம் குற்றவாளிகள் அல்ல. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பரிகாரங்களும், அவர்கள் வாதாடுவதற்கு உரிமையும், நியாயத்தை எடுத்துச் சொல்ல வேண்டிய இடத்திலே மறுக்கின்ற சூழ்நிலையை இந்த மசோதா உருவாக்குகிற காரணத்தால், இது தேவையற்ற ஒன்று என்ற காரணத்தால், இதை அறிமுக நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது.*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையில் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் எதிர்க்கிறேன்.*

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களாலே அறிமுகம் செய்யப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவு, மின்னணு காணொலி இணைப்பு ஊடகம் என்ற* Electronic Video Linkage *என்பது இப்போது தேவையில்லாத ஒன்று. ஆரம்ப நிலையிலேயே, குற்றவாளி இல்லை என்று நிரூபிக்கப்படாத நிலையிலே, குற்றம் சுமத்தப்பட்ட நிலையிலே அவர்கள் குற்றவாளிகள் இல்லை என்ற காரணத்தினாலே, இப்படிப்பட்ட சட்டத் திருத்தம், சட்டமுன்வடிவு என்பது தேவையில்லாத ஒன்று என்ற காரணத்தினாலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, remand-க்கு கொண்டுபோகக்கூடிய நேரத்திலேதான் பாதிக்கப்பட்டவர்கள் நீதிபதியிடம் ஏதாவது புகார் கொடுப்பதற்கான சந்தர்ப்பம் உள்ளது. அது, இந்தமாதிரி புகைப்படம் வழியாக அவர்களைப் பார்ப்பதற்கான வாய்ப்பு கிடைக்கிறதே தவிர, accused ஆட்களைப் பொறுத்த அளவிலே,

அவருக்கு இருக்கிற குறைகளைச் சொல்வதற்கான வாய்ப்பு இல்லாமல் போகிறது. எனவே இச்சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Video Conferencing மூலமாகப் பேச முடியும். அது வெறும் புகைப்படம் அல்ல. Live-ஆகவே பேச முடியும்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. ஜி. பழனிசாமி:** நான் சொல்லிவிடுகிறேன். எஸ்.ஆர்.பி., நான் சொன்னதற்குப் பிறகு சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.ஆர்.பி. அவர்களே, இது ஆய்வுக்கு இன்னும் வரவில்லை. அறிமுக நிலையில் எதிர்க்கிறீர்கள், அவ்வளவுதான். அதோடு இருக்கட்டும். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு என்பது, சிறையில் இருந்து கொண்டே நீதிபதியிடத்திலே தன்னுடைய வாக்குமூலங்களை அளிக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவு என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதும், சட்ட அமைச்சர் சொல்லியிருப்பதும் கைதிகளை அழைத்துச் செல்லும்போது பாதுகாப்பு இல்லை என்ற முறையில்தான் இதைக் கொண்டு வந்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். இருந்தபோதிலும்கூட, காவல் துறையிலே பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டுமே தவிர, அதற்காக இவர்கள் சிறையிலிருந்தே நீதிபதியிடத்திலே தங்களுடைய வாக்குமூலங்களை அளிப்பது என்பது சரியல்ல. ஆகையினாலே இந்தச் சட்டமுன்வடிவை நான் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்படுகின்ற நிலையிலே எங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2002 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஆ) சென்னைப் பெருநகர்ப் பரப்பிட நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2002.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப் பரப்பிட நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2002ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப் பரப்பிட நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலே நான் எதிர்க்கிறேன். இது ஒரு தவறான முன்மாதிரியாகப் போய்விடும். எல்லா இடங்களிலேயும் ஒரே ஆழத்திலே நீர் கிடையாது. எனவே, இது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனவே, எதிர்க்கிறோம் என்று சொன்னால் போதும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களாலே கொண்டுவரப்பட்ட இந்த சட்டமுன்வடிவு தேவையில்லாத ஒன்று என்ற காரணத்தினாலே, இந்தச் நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டத்தைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.